**செ.வெ.எண்: 36** **நாள்:13.10.2017**

**பத்திரிக்கை செய்தி**

**திருநெல்வேலி மாவட்டத்தில் 2017–18 பிசானம் நெற்பயிருக்கான பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம்**

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளிலிருந்து பாதுகாக்கவும்,பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதை ஊக்குவிக்கவும், **2017–2018** ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சம்பா/தாளடி/பிசான பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெற்பயிரை பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி நடப்பாண்டில், திருநெல்வேலி மாவட்டத்தில், பிசான பருவத்தில் **526** வருவாய் கிராமங்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், கடன் பெறும் விவசாயிகள், அவர்கள் கடன் பெறும் வங்கிகளில் கட்டாயமாக பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்யப்படுவர். கடன்பெறா விவசாயிகள், திருநெல்வேலி மாவட்டத்தில் இத்திட்டத்தை செயல்படுத்தும் காப்பீட்டு நிறுவனத்தின் (ICICI LOMBARD) அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவோ, பொதுசேவைமையங்கள் (Common ServiceCentres (CSC) மூலமாகவோ வங்கிகள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ விருப்பத்தின் பேரில் பதிவு செய்துகொள்ளலாம். இவ்வாறாக பிசான பருவத்தில் நெற்பயிரிடும் **விவசாயிகள் இத்திட்டத்தில் பதிவுசெய்ய கடைசி நாள் 30 நவம்பர், 2017.** எனவே விவசாயிகள் இறுதி நேர நெரிசலை தவிர்க்கவும், விவசாயிகளின் விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும், பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீட்டுத் தொகைக்கான கட்டணத்தை செலுத்தி தங்களது நெற்பயிரை முன்கூட்டியே பதிவுசெய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பயிர் காப்பீட்டுத் தொகையில், விவசாயிகள் 1.5 சதவீதம் மட்டும் அதாவது ஏக்கருக்கு ரூ.352.50 காப்பீட்டுக் கட்டணமாக** செலுத்தினால் போதுமானது.

விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு விண்ணப்பத்துடன், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல், வங்கிக் கணக்கு புத்தகத்தின் (Bank pass book) முதல் பக்க நகல், ஆதார் அட்டை (Aadhar Card) நகல் ஆகியவற்றை இணைத்து, காப்பீட்டுக் கட்டணத் தொகையை செலுத்திய பின் அதற்கான இரசீதையும் பொதுச் சேவைமையங்கள்/ தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம். என மாவட்ட **ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.**

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.**